*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2026** **20 ஜனவரி 2026**

**<u>பத்திரிகை செய்தி</u>**

ஜிப்பர் நிறுவனத்தின் 14-வது பட்டமளிப்பு விழா ஜிப்மர் வளாகத்தில் உள்ள டாக்டர் ஏபிஜே. அப்துல் கலாம் கலையரங்கத்தில் இன்று (20 .01.2026) நடைபெற்றது. மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பட்டங்கள் மற்றும் பதக்கங்களை வழங்கி சிறப்பித்தார்.

மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் விழாவில் கலந்து கொண்டார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம், மாண்புமிகு மக்களவை உறுப்பினர் திரு மஞ்சுநாத், சட்டமன்ற உறுப்பினர் ஏகேடி. ஆறுமுகம், தலைமைச் செயலர் திரு சரத் சவுகான், ஜிப்மர் நிறுவனத்தின் தலைவர் திருமதி சித்ரா சர்கார், இயக்குனர் டாக்டர் வி. சிங் நெகி ஆகியோர் உடன் இருந்தனர்